සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
Department of Samurdhi Development

සමාජ සවිබලගැන්වීම් හා සුබසාධන අමාත්‍යාංශය
சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சு
MINISTRY OF SOCIAL EMPOWERMENT AND WELFARE

| | | |
|---|---|---|
| මගේ අංකය DDD/HO/07/SD/05/01/SK<br>எனது இல ......<br>My No | ඔබේ අංකය<br>உமது இல ......<br>Your No | දිනය 2017/06/05<br>திகதி ......<br>Date |

சகல மாவட்ட செயலாளர்/மாவட்ட மேலதிக பணிப்பாளர்
தலைமையதிபதிகள்
சகல மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர்கள்,
சகல பிரதேச செயலாளர்கள்.

**<u>சமுர்த்தி கெக்குலு சிறுவர் கழக கலாச்சார மற்றும் இலக்கியப் தேசியப் போட்டிகள் - 2017</u>**

சமுர்த்தி கெக்குலு சிறுவர் கழகத்தினை மறுசீரமைப்பது தொடர்பில் தங்களுக்கு முன் வைத்த எனது சம இலக்கத்தினையுடைய 2017.03.31ம் திகதியிடப்பட்ட கடிதம் தொடர்பில்

02. அதற்கமைய சகல மாவட்டங்களையும் உள்ளடக்கி வருடாந்தம் செயற்படுத்தப்படுகின்ற சமுர்த்தி கெக்குலு சிறுவர் கழக கலாச்சார மற்றும் இலக்கிய தேசிய போட்டிகளை 2017ம் ஆண்டிலும் நடாத்துவதற்கான நடவடிக்கைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. நாடு பூராகவுமுள்ள சமுர்த்தி கெக்குலு சிறுவர் கழகங்களில் ஒன்றிணைந்துள்ள 10 இலட்சம் மட்டமளவிலான சிறுவர்கள் பல்வேறு போட்டிகளின் ஊடாக கலாச்சார மற்றும் இலக்கிய ஆற்றல்களை வளர்த்துக் கொள்வதற்கு இச்சிறார்களுக்கு இதன் மூலம் வழிவகுக்கும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. 2004ம் ஆண்டிலிருந்து 2016ம் ஆண்டு வரையில் இத் தேசிய போட்டித் தொடரானது சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழியில் 03 வயதுத் தொகுதிகளில் வெற்றிகரமாக நடாத்தும் பொருட்டு தாங்களும் தங்களது பணியாளர்களும் வழங்கிய ஒத்துழைப்பினை நன்றியுணர்வுடன் நினைவூட்டுகின்றேன்.

03. சமுர்த்தி கெக்குலு சிறுவர் கழக இலக்கிய மற்றும் கலாச்சாரப் போட்டிகள் வங்கிச்சங்க, பிரதேச, மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் 03 வயதுத் தொகுதிகளின் கீழ் 2017ம் ஆண்டிலும் நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. தற்போது மறுசீரமைக்கப்பட்டுள்ள மற்றும் புதிதாக ஆரம்பித்த சமுர்த்தி சிறுவர் கழகங்கள் உணர்வுமிக்க, படைப்பாக்கமுள்ள திறமைகளைக் கொண்டுள்ள அறிவுபூர்வமானதும், நல்ல பண்புள்ளவர்களுமான சிறுவர் சமூகம் ஒன்றினை உருவாக்கும் நோக்கில் இந்த வேலைத்திட்டத்தினை செயற்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது.

04. இம் முறையும் சமுர்த்தி அபிவிருத்தி வேலைத்திட்டத்தினை சிறுவர்களின் வாழ்வினை உயர்ந்த ரீதியில் பேணிச் செல்வதற்கு முன்னுரிமையினை வழங்கி ஆத்மீக அபிவிருத்தியினூடாக பொருளாதார அபிவிருத்தியினை வெற்றி கொள்வதற்கு பாரிய தடையாகவுள்ள போதை மற்றும் புகைத்தல் பாவனைக்கு எதிரான கருத்துக்களை முன் வைத்து போதை மற்றும் புகைத்தல் பாவனை மக்களது வாழ்க்கையில் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றது என்பதனைத் தலைப்பாகக் கொண்டு வங்கிச் சங்கங்களிலும், பிரதேச, மற்றும் மாவட்டப் போட்டிகள் நடைபெறும் இடங்களில் அறிவிக்கப்பட வேண்டிய செய்திகளைக் கொண்ட பதாதைகளை காட்சிப்படுத்தல்

1වන අදියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල. /1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல /1st Step, 4th floor, Sethsiripaya ,Battaramulla

අධ්‍යක්ෂ ජනරාල්
பணிப்பாளர் தலைமையதிபதி
Director General
Tel- 011-2873802/2872202
Fax - 011-2889002
E-mail- dg@divineguma.gov.lk

අධ්‍යක්ෂ (මානව සම්පත්)
பணிப்பாளர் ( மனிதவளம்)
Director (Human Resource)
011-2873799
011-2873996
diradmin@divineguma.gov.lk
Hot Line : 0112-889007

ප්‍රධාන ගණකාධිකාරී
பிரதான கணக்காளர்
Chief Accountant
011-2869742
011-2869742
finance@divineguma.gov.lk

අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය)
பணிப்பாளர் (குறு நிதி )
Director ( Micro Finance)
011-2889003
011-2887469
Hot Line:0112-885582

කාර්යාලය
அலுவலகம்
Office
011-2887280
Hot Line: 011- 2887722

வேண்டும். இந்த பதாதைகளுக்கான மாதிரிகள் 04, இணைப்பு இலக்கம் 07 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மாதிரிகள் 04 ஐயும் அச்சிட்டு காட்சிப்படுத்துவது மிகவும் பொருத்தமானதாக அமையும். ஒரு பதாதையானது 06 அடி நீளத்தினையும் 03 அடி அகலத்தினையும் கொண்டதாக இருத்தல் வேண்டும். ஒரு பதாதையின் பொருட்டு செலவிடக் கூடிய உயர்ந்த பட்ச தொகையானது 1000/= ஆகும். சமுர்த்தி வேலைத்திட்டத்திற்கு ஒரு புதிய பிரச்சாரத்தினை வழங்குவதற்காக வங்கிச்சங்கம் ஒன்றின் ஒரு பதாதையினாவது காட்சிப்படுத்தல் வேண்டும் என்பதுடன் மாவட்டச் செயலகம் இது தொடர்பில் மேற்பார்வைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

05. போட்டிகளை நடாத்துவது தொடர்பிலான தகவல்கள் கீழே காட்டப்படுகிறது.

- இணைப்பு இலக்கம் 01 - பொதுவான போட்டி நிபந்தனைகள்
- இணைப்பு இலக்கம் 02 - போட்டிகளின் விபரம்
- இணைப்பு இலக்கம் 03 - சிங்கள மொழி மூல போட்டி நிகழ்ச்சிகள்
- இணைப்பு இலக்கம் 04 - தமிழ் மொழி மூல போட்டி நிகழ்ச்சிகள்
- இணைப்பு இலக்கம் 05 - கால வரையறை / செயற்படுத்தும் பொறுப்பும் அங்கீகரித்தலும்
- இணைப்பு இலக்கம் 06 - சிறுவர் கதைகளின் புள்ளிகளைப் பதிதல் (வலய மட்டத்திலிருந்து )
- இணைப்பு இலக்கம் 07 - பதாதைக்கான வாக்கியத் தொடர்கள்

06. நாடு தழுவிய ரீதியில் நடைபெறும் சமுர்த்தி கெக்குலு சிறுவர் கழக போட்டிகளின் அடையாளம் காக்கப்படுகின்ற பிரகாரமும் பொதுவான பெறுமதியினை வழங்குவதனை அடிப்படைக் குறிக்கோளுடன் ஒரே மாதிரியான சான்றிதழ்களை வழங்குதல் வேண்டும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது. பிரதேச மற்றும் மாவட்ட மட்டத்தில் நடைபெறும் போட்டிகளின் போது வெற்றி பெறும் சிறார்களுக்கு வழங்கப்படவுள்ள சான்றிதழ்களின் மாதிரிகள் இவ்வாண்டிற்கான வரைகலை வடிவத்தினை மின்னஞ்சல் ஊடாக பெற்றுக்கொள்ளுமாறும் வினயமுடன் அறியத்தருகின்றேன்.

07. இப் போட்டிகளை வெற்றிகரமாக நடாத்துவதற்கு தாங்கள் வழங்கும் ஒத்துழைப்பினைப் போற்றி மதிக்கின்றேன்.

நீல் பண்டார ஹப்புஹின்ன
பணிப்பாளர் தலைமையதிபதி

பிரதிகள்:-

1. செயலாளர், சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சு த.கூ.க.பொருட்டு
2. பிரதான உள்ளகக்கணக்காய்வாளர், வா.எ.அ.தி - த.கூ.க.பொருட்டு உ.ந.பொருட்டும்
3. பிரதம கணக்காளர், வா.எ.அ.திணைக்களம் - த.கூ.க.பொருட்டு
4. சகல பணிப்பாளர்கள், வா.எ.அ.திணைக்களம் - த.கூ.க.பொருட்டு
5. சகல வங்கி வலயப் பொறுப்பு முகாமையாளர்கள் - த.கூ.க.பொருட்டு

TRANSLATED BY - M.M.M.JAHAR( Translator)